# BSNL ஊழியர்சங்கம்

## தமிழ்மாநிலம்

**சுற்றறிக்கை எண்:59** **தேதி:-07.04.2018**

## அகர்தலா மத்திய செயற்குழு கூட்ட முடிவு
## கவன ஈர்ப்பு தினம் – 3.5.2018

அன்பார்ந்த தோழர்களே,

2018 ஏப்ரல் 3, 4 மற்றும் 5 தேதிகளில் அகர்தலாவில் கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம், தன் பணிகளை வெளியாரிடம் ஒப்படைப்பதில் BSNL நிர்வாகம் அதீத ஆர்வத்துடன் செயல்படுவதை மிகுந்த கவலையோடு பரிசீலித்தது.

நமது ஊழியர்களாலேயே செய்து முடிக்கக் கூடிய பணிகள் உட்பட, ஒவ்வொரு வேலையும் வெளியாரிடம் ஒப்படைக்கப் பட்டு வருகிறது. இந்த அயல்பணியின் மூலம் சில நபர்கள் ஆதாயம் அடையலாம். இந்த அயல்பணிகளின் மூலம், மிகப் பெரிய அளவில், BSNL நிறுவனத்தின் பணம் வெளியே செல்கிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

BSNL ல் புதிய நியமனங்களை` ஊழியர் பொறுத்த வரை, ஜூனியர் எஞ்ஜீனியர் கேடரில் மட்டுமே இதுவரை நேரடி நியமனம் நடைபெற்று வருகிறது. மிகப் பெரிய அளவில் பணி ஓய்வுகள் உள்ள காரணத்தால், SR. TOA கேடரில் கடுமையான ஆட்பற்றாக்குறை இருந்த போதும், SR. TOA நேரடி நியமனம் நடைபெறுவதில்லை. எனவே, SR. TOA கேடரில் நேரடி நியமனங்களை நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஏராளமான வீண் செலவுகள், BSNL நிறுவனத்தின் நிதிநிலைமையைக் கடுமையாகப் பாதித்து வருகின்றன. ஏற்கனவே இது குறித்து BSNL ஊழியர் சங்கம், BSNL தலைமை நிர்வாக இயக்குநர், இயக்குநர்(நிதி) ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது. சமீபத்தில், கார்ப்பரேட் அலுவலகத்தின் நான்கு அதிகாரிகள் ஸ்ரீலங்காவிற்கு ஒரு கிரிக்கெட் போட்டிக்கு, சென்று வந்ததாக நமக்குத் தெரிய வந்துள்ளது. BSNL உயர்மட்ட நிர்வாகம், வீண் செலவுகளைக் குறைக்கும் மனநிலைமையில் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

அதற்குப் பதிலாக, நிதி நெருக்கடி என்ற பெயரில், ஊழியர்களுக்கு தற்போது அமுலில் உள்ள மருத்துவ வசதிகளைக் குறைத்து நிறுத்தி விட நிர்வாகம் முயற்சி செய்து வருகிறது.

BSNL நிர்வாகத்தின் வீண் செலவுகளைக் குறைக்கக் கோரி, ஒரு விரிவான குறிப்பை நிர்வாகத்துக்கு அளிக்க, அகர்தலா மத்திய செயற்குழு கூட்டம் முடிவு செய்துள்ளது.

ஒப்பந்த தொழிலாளர்கள் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்து விடுமாறு, கார்ப்பரேட் அலுவலகம், மாநில தலைமைப் பொது மேலாளர்களுக்கு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. சிறிதளவு பணத்தை சேமிக்க இது உடனடியாக பலனளிக்கக் கூடும். ஆனால், நீண்ட கால அடிப்படையில், இது நமது சேவைகளின் தரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி விடும். ஏனெனில், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவில் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டு வருகிறார்கள்.

இப்பிரச்னைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன், அகர்தலா மத்திய செயற்குழு கூட்டம், எதிர்வரும் **3.5.2018 அன்று, ”கவன ஈர்ப்பு தினம்”** அனுசரித்திட முடிவு செய்துள்ளது.

**அன்றைய தினம், நாடு முழுவதும், கறுப்பு அட்டைகள் அணிந்து, மதிய உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் பட வேண்டும்.**

## கவன ஈர்ப்பு தின கோரிக்கைகள்

1. **BSNL பணிகளை வெளியாருக்குக் கொடுப்பதை நிறுத்திடு !**
2. **BSNL நிறுவனத்தின் வீண் செலவுகளை குறைத்திடு !**
3. **பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் மருத்துவ வசதிகளைக் குறைக்காதே !**
4. **ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்யாதே!**
5. **SR. TOA கேடரில் புதிய நியமனங்கள் செய்திடு !**

போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திட அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து மாநில மாவட்டச் சங்கங்கள் மேற்கொள்ளுமாறு அகர்தலா மத்திய செயற்குழு கூட்டம் அறைகூவல் விடுத்துள்ளது. தமிழகத்தில் அனைத்து கிளைகளிலும் இந்த ’கறுப்பு அட்டை அணிந்த ஆர்ப்பாட்ட’த்தை எழுச்சியுடன் நடத்திட வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபுராதாகிருஷ்ணன்)**
**மாநிலசெயலாளர்**